# தஞ்சாவூரில் பிரம்மாண்ட “சோழர் அருங்காட்சியகம்!”

## சட்டப் பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை... 4- ஆம் பக்கத் தொடர்ச்சி

செய்யப்பட இருக்கிறது.

புதுக்கோட்டை, திருச்சி மற்றும் திருநெல்வேலி அரசு அருங்காட்சியகங்களின் பாரம்பரியக் கட்டடத்தை பழமை மாறாமல் மீட்டுருவாக்கம் செய்ய முதற்கட்டப் பணிகள் சுமார் ரூபாய் ஐந்து கோடி செலவிலே நிறைவடைந்துள்ளன. உதகமண்டலம் அரசு அருங்காட்சிய காட்சியமைப்புப் பணிகள் முதற்கட்டமாக ரூ.55 இலட்சம் செலவில் நிறைவடைந்துள்ளது. சேலம் அரசு அருங்காட்சியகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணிகள் ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு நிறைவுபெறும் தருவாயில் உள்ளது.

அதைப்போல தொடர்ந்து நடைபெற்று வரும் பணிகள், சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் அருங்காட்சியகத் துறைக்கான புதிய நிருவாக கட்டடம், உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள புதிய கட்டடம் ரூ.4.80 கோடி மதிப்பிலே, இன்றைக்கு பணிகள் நிறைவடையும் சூழலில் உள்ளது. சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள தேசிய கலைக்கூடத்தின் மீது முப்பரிமாண laser கண்காட்சி அமைக்கும் பணிக்கு ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பாரம்பரிய பாந்தியன் கட்டட சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிக்கு ரூ.5 கோடியே 41 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

75வது சுதந்திர தினத்தினை கொண்டாடும் வகையில், முதலமைச்சர் அவர்கள் 2022 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் விடுதலைப் போராட்டங்களில் தமிழ்நாட்டின் பங்களிப்பை போற்றும் வகையில், சேப்பாக்கம் மெரினா கடற்கரையில் அமைந்துள்ள சுமார் 250 ஆண்டுகள் பழமை வாய்ந்த Humayun Mahal (பாரம்பரிய கட்டடப் பிரிவு) மீட்டுருவாக்க பணிக்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விருதுநகர் அரசு அருங்காட்சியகத்திற்கு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, புதிய கட்டடத்தின் கட்டுமான பணியை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள். விரைவில் அந்தப் பணி முடிக்கப்படும். காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகம் ஏகாம்பரநாதர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான புதிய கட்டடத்திற்கு மாற்றியமைக்கும் பணிக்காக ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம், கடலூர் மற்றும் வேலூர் அரசு அருங்காட்சியகம் அமைக்க ரூ.2 கோடியே 90 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மதுரையில் உள்ள காந்தி நினைவு அருங்காட்சியகத்தின் புராதன கட்டடத்தை சீரமைத்து, காட்சியமைப்புகளை மேம்படுத்தி, தரம் உயர்த்தும் பணிக்காக சுமார் ரூ.6.00 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் விதி 110 ன்கீழ், சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தஞ்சாவூர் பெரிய கோயில் அருகில் சுமார் 6 ஏக்கர் தேர்வு செய்யச் சென்னார்கள். அது ஏறத்தாழ 6 ஏக்கர் 39 சென்ட் என்ற வகையிலே இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. “சோழர் மாபெரும் அருங்காட்சியகம்” அமைக்க கருத்துரு தயாரிப்பதற்காக, திட்ட விரிவாக்க அறிக்கை தயாரிப்பதற்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அனுமதித்திருக்கிறார்கள். அதற்கான பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டி வருகிறது. பிரம்மாண்டமாக அங்கே அருங்காட்சியகம் அமையவிருக்கிறது. இன்றைக்கு, ஆலோசகர் நிபுணர் குழு. அதற்காக அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் மூலமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய சாதனைகளைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

### அறிவிப்புகள்

### கலை பண்பாட்டுத் துறை

1. மதுரையில் பாரம்பரியமிக்க கவின் கலைகளைப் பயிற்றுவிக்கும் புதிய அரசு கவின் கலைக் கல்லூரி ரூ.4.79 கோடி செலவில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள்.

பாரம்பரியமிக்க கவின் கலைப் பிரிவுகளில் பயில்வதற்கு மாணாக்கர்களிடையே அதிக ஆர்வம் காணப்படுவதால், தென் மாவட்டங்களில் உள்ள மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் வண்ணக் கலை (Painting), காட்சிவழித் தகவல் வடிவமைப்பு (Visual Communication Design) மற்றும் சிற்பக்கலை (Sculpture) பிரிவுகளுடன் புதியதாக அரசு கவின் கலைக் கல்லூரி மதுரையில் அமைக்கப்படும். இதற்கென தொடரும் செலவினமாக ரூ.3.62 கோடியும், தொடராச் செலவினமாக ரூ.1.17 கோடியும் ஆக மொத்தம் ரூ.4.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. “கலைமாமணி” விருது பெற்ற கலைஞர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு அரசின் மதிப்பு மிக்க விருதான கலைமாமணி விருது பெற்ற கலைஞர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். கலைமாமணி விருது பெற்ற கலைஞர்கள் 60 வயது நிறைவடைந்திருப்பின் அவருடன் உதவியாளர் ஒருவரும் கட்டணமின்றி பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

## 10 மூத்த கலைஞர்களுக்கு தலா ரூ. 1 லட்சத்திற்கான காசோலை!

3. மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் பழுதடைந்த பழைய கட்டடங்கள் ரூ.1.00 கோடி செலவில் புனரமைக்கப்படும்

மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் பழுதடைந்துள்ள அலுவலகக் கட்டடங்கள், வகுப்பறைக் கட்டடங்கள், செய்முறை பயிற்சிக்கூடங்கள் மற்றும் தொழிற்கூடம் ஆகியவற்றினை புனரமைத்திட தொடராச் செலவினமாக ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு கணினிகள், அச்சு இயந்திரங்கள் மற்றும் பொறித்தல் இயந்திரம் (Etching Machine) கொள்முதல் செய்திட ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில், கவின்கலைகளில் ஓவியம், காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு ஆகிய பாடப் பிரிவுகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு, பயிற்சி உபகரணங்கள், அச்சு இயந்திரங்கள் மற்றும் பொறித்தல் இயந்திரம் (Etching Machine) ஆகியவற்றைக் கொள்முதல் செய்திட தொடராச் செலவினமாக ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக மாணாக்கர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கும், வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள சிலைகளைப் புதுப்பித்தலுக்கும் ரூ.17.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு, வகுப்பறை தளவாடப் பொருட்கள், அலு வலக தளவாடங்கள், சுத்திகரிப்பு இயந்திரம் போன்றவற்றை கொள்முதல் செய்திடவும், ஏற்கெனவே வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டு சிலைகளை புதுப்பித்தலுக்கும் தொடராச் செலவினமாக ரூ.17.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### அருங்காட்சியகங்கள் துறை

1. சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் கருப்பொருள் சார்ந்த படிமக் கூடங்கள் (Galleries on Bronze Icons) அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பல்லவர், சோழர், விஜயநகர காலத்தைச் சார்ந்த சைவம், வைணவம், பௌத்தம் மற்றும் சமணப்படிமங்கள் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளன. இந்தச் சிறப்புமிக்க சேகரிப்பை காட்சிப்படுத்த சிறுவர் அருங்காட்சியகத்தின் பழைய கட்டடத்தினை அகற்றி அவ்விடத்தில் பாரம்பரிய சூழலுக்கு ஏற்றவாறு புதிய கட்டடம் கட்டி உலகப் புகழ் வாய்ந்த தமிழர்களின் உலோக வார்ப்புக் கலைக்கும் கலைத்திறனுக்கும் சான்றாக திகழ்கின்ற படிமங்களை ‘கருப்பொருள் சார்ந்த காட்சிக் கூடங்களாக’ (Galleries on Bronze Icons) வடிவமைத்து இந்திய மற்றும் அயல்நாட்டு பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் பன்னாட்டு தரத்தில் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

திருச்சிராப்பள்ளி தமிழ்நாட்டில் பெருநகரங்களில் ஒன்றாகவும் தொன்மை வாய்ந்த நகரமாகவும் சுற்றுலா மற்றும் புனித யாத்திரை பயணிகள் அதிக அளவில் ஆண்டு முழுவதும் வந்து செல்லும் இடமாகவும் உள்ளது. அவர்களைக் கவரும் வகையிலும், தமிழ்நாட்டின் பண்பாடு மற்றும் வரலாறு தொடர்பான சிறப்புகளை எடுத்துக்கூறும் வகையிலும் புதிய அருங்காட்சியகம் புதிய பேருந்து நிலையம் அமையவுள்ள பஞ்சப்பூரில் தேர்வு செய்யப்பட்டுள்ள சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் ஊடாடும் தொழில்நுட்பம் மற்றும் சிறப்புக் காட்சி அமைப்புகளுடன்கூடிய காட்சிக் கூடங்களை அமைத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம் ரூ.2.50 கோடி செலவில் விரிவாக்கம் செய்து மேம்படுத்தப்படும்

தற்பொழுது செயல்பட்டுவரும் வேலூர் அரசு அருங்காட்சியகத்திற்கு எதிரில், இந்திய தொல்லியல் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ள வாடகை கட்டடத்தில், நவீன வசதிகளுடன் சிறப்பு தொழில்நுட்பம் மற்றும் காட்சியமைப்புகளுடன்கூடிய புதிய காட்சிக் கூடங்கள் அமைத்து மேம்படுத்திட ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகம் நவீன தொழில்நுட்பத்துடனும் காட்சியமைப்புகளுடனும் ரூ.1.50 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்படும்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பழைய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் அரசு அருங்காட்சியகத்தில் நவீன தொழில்நுட்பத்துடனும் காட்சியமைப்புடனும் கூடிய புதிய காட்சிக் கூடங்கள் அமைத்து விரிவாக்கம் செய்திட ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ள பாரம்பரியக் கட்டடத்தினை நவீன தொழில்நுட்பத்துடனும் காட்சியமைப்புகளுடனும் ரூ.1 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்படும்

ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பாரம்பரிய கட்டடத்தில் இயங்கி வரும் கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தினை, நவீன தொழில்நுட்பத்துடனும் காட்சியமைப்புகளுடனும்கூடிய புதிய காட்சிக் கூடங்கள் அமைத்து விரிவாக்கம் செய்திட ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இராமநாதபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தை வேறு கட்டடத்திற்கு மாற்றி ரூ.1 கோடி செலவில் காட்சிய மைக்கப்படும்

இராமநாதபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் முன்னாள் படை வீரர் நலத் துறைக்கு சொந்தமான ஜவான்ஸ்பவன் கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. பழுதடைந்துள்ள இக்கட்டடத்தில் இருந்து இவ்வருங்காட்சியகத்தை வேறு கட்டடத்திற்கு மாற்றி காட்சியமைத்திட ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. அரிய அரும்பொருட்களை சேகரித்து அரசு அருங்காட்சியகங்கள் எதிர்கால சந்ததியினருக்கான ஒரு களஞ்சியமாக்க ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாட்டு சான்றாதாரங்களாக திகழ்கின்ற அரும்பொருட்களையும் நாளைய வரலாற்றுச் சான்றுகளாக திகழவுள்ள இன்றைய அரும்பொருட்களையும் தொடர்ச்சியாக சேகரிப்பதன்மூலம் மட்டுமே அருங்காட்சியகங்கள் எதிர்கால சந்ததியினருக்கான பண்பாட்டு சேகரிப்பு களஞ்சியங்களாக செயல்பட இயலும். எனவே, தேர்வு செய்யப்பட்ட அரும்பொருட்களை உரிமையாளர்களிடமிருந்து வெகுமதி அளித்து பெறுவதற்கும் கள சேகரிப்புகளை மேற்கொள்வதற்கும் தொடரும் செலவினமாக ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரைத்தார்

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கட்டிமேடு அ. பக்கீர் முகமது

**ஜூலை 9 (2011)**



இளமைப் பருவம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றி, திருத்துறைப்பூண்டி பகுதியில் பல கிளைக் கழகங்களை உருவாக்கி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.

கிளைக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல பொறுப்புகளை வகித்தவர்.

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடன் சிறைக்குச் சென்றவர். தொடர்ந்து மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## விக்கிரவாண்டியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவினர் பிரச்சாரம்!

### டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் மசூதிகளில் வாக்குச்சேகரித்தனர்!

*விக்கிரவாண்டி, ஜூலை 9-*

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் பல்வேறு ஜமாஅத் மற்றும் தேவாலய பிரதிநிதிகளை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தனர்.

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளான ஜூம்ஆ மஸ்ஜித், மஸ்ஜிதே ஹாஜி அலி ஜாமியா மாம்பலப்பட்டு, மஸ்ஜித் குபா சூரபட்டு, மஸ்ஜித் முகம்மத் கௌஸ் ஏ.ஜி.சர்ச் விக்கிரவாண்டி, முண்டியம்பாக்கம், சாத்தனூர், வெட்டுக்காடு, கீழகொந்தை, கொங்கராம் பூண்டி, ஆர். சி. சர்ச் , சி.எஸ். ஐ. சர்ச் முண்டியம்பாக்கம், ஏ.ஜி.சர்ச் விக்கிரவாண்டி மற்றும் சிறுபான்மையின மக்களை உள்ளடக்கிய பல்வேறு பகுதிகளில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

அதுபோது, சிறுபான்மையின மக்களுக்கு தி.மு.கழக அரசு செய்த சாதனைகளையும், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற இந்த மூன்றாண்டுகளில் கொண்டு வந்த எண்ணற்ற நலத்திட்டங்களையும் உள்ளடக்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி வாக்குகளை சேகரித்தனர்.

அதுபோது, மாநில துணைச் செயலாளர்கள் அடையாறு ஷபீல் கான், ஷாகுல் அமீது, விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் தமீம் அன்சாரி, சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.அர்.டி.அப்துல் ரகுமான், சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சையத் சாவலி, திருவள்ளூர் மேற்கு மாவட்ட அமைப்பாளர் சித்திக் அலி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தலைவர் ராபர்ட், துணை தலைவர்கள் அசோக்ராஜ், டோமினிக், துணை அமைப்பாளர்கள் சாதிக் அலி, எஸ். கே.எஸ்.அலி, மற்றும் அமானுல்லா ஆகியோர் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குழந்தை தமிழரசன்

**ஜூலை 9 (2020)**



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கல்லூரி மாணவர் பேரவை தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியதோடு, பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், தீர்மானக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1996ல் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**